சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மீன்வளத் துறையின் சார்பில் நாட்டின மீன் குஞ்சுகளை ஆறுகளில் இருப்பு செய்தல் திட்டத்தின் கீழ் 20,000 மீன் விரலிகளை இருப்பு வைக்கும் பணியினை முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, நைனாத்தாள் ஏரி பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று (30.06.2025) தொடங்கி வைத்தார். உடன் மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் பொ.சுகுமார், மீன்வளத்துறை உதவி இயக்குநர் திருமதி த.உமா கலைச்செல்வி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (30.06.2025) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, இராயபுரம் மண்டலம், வார்டு 53க்குட்பட்ட பேசின் பிரிட்ஜ் சாலையில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ள கால்நடை காப்பகத்தைப் பார்வையிட்டு, கால்நடை உரிமையாளர்களுக்கு பால் பாத்திரங்களை வழங்கினார். இந்த ஆய்வின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி (இராயபுரம்), ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), எச்.ஆர்.கௌஷிக், (மத்தியம்), அஃதாப் ரசூல், (தெற்கு), நிலைக்குழுத் தலைவர் (நகரமைப்பு) தா.இளைய அருணா, மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திருமதி பா. வேளாங்கண்ணி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இராயபுரம் கால்நடை காப்பகம் ஆய்வு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு மேற்கொண்டார்!

சென்னை, ஜூலை.1-

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, இராயபுரத்தில் உள்ள கால்நடை காப்பகத்தினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக தெருக்கள் மற்றும் சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் கால்நடை காப்பகங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, இராயபுரம் மண்டலம், வார்டு 53க்குட்பட்ட பேசின் பிரிட்ஜ் சாலையில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட கால்நடை காப்பகமானது துணை முதலமைச்சர் அவர்களால் 11.06.2025 அன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது.

பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட இராயபுரம் கால்நடை காப்பகத்தை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேற்று (30.06.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கால்நடை உரிமையாளர்களுக்கு பால் பாத்திரங்கள் மற்றும் கால்நடைகளுக்கு பசுங்கீரைகள் மற்றும் உணவுத் தீவனங்களை வழங்கினார்.

இந்தக் கால்நடை காப்பகத்தில் மேலும் கூடுதலாக கால்நடைகளைப் பராமரிக்கும் வகையில் இந்தக் காப்பகத்தினை விரிவுபடுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், கூடுதல் கண்காணிப்புடன் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்தக் கால்நடை காப்பகத்தில் தற்போது 210 கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒரு கால்நடைக்கு நாளொன்றுக்கு ரூ.10/ பராமரிப்புக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி (இராயபுரம்), ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), எச்.ஆர்.கௌஷிக், (மத்தியம்), அஃதாப் ரசூல், (தெற்கு), நிலைக்குழுத் தலைவர் (நகரமைப்பு) தா.இளைய அருணா, மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திருமதி பா.வேளாங்கண்ணி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப் சாமுவேல் தலைமையில்

அம்பத்தூர் வடக்குப் பகுதி (BLA2) - (BDA) பயிற்சி பாசறை கூட்டம்!

சங்கரி தனசேகரன் – பி.முனியாண்டி பங்கேற்பு!

சென்னை, ஜூலை.1-

அம்பத்தூர் வடக்கு பகுதி பாக நிலை முகர்வர்கள் (BLA2) மற்றும் பாக சமூக வளைதள முகவர்கள் (BDA) பயிற்சி பாசறை கூட்டம் வடக்கு பகுதி கழக செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

கழக தலைவர் முதல மைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுருத்தலின்படி, சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில் பாக நிலை முகர்வர்கள் (BLA2) மற்றும் பாக சமூக வளைதள முகவர்கள் (BDA) பயிற்சி பாசறை கூட்டம் அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ் சேஞ் அருகில் உள்ள PSB Convention மகாலில் 28.06.2025 சனிக்கிழமை மாலை 7.00 மணியளவில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப் சாமுவேல் தலைமையில், கழக இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் சென்னை வட கிழக்கு மாவட்டம் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளருமான பி.முனியான்டி, த.செ.கு.உறுப்பினர், அம்பத்தூர் 7வது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி தெற்கு பகுதி கழக செயலாளரும் மாமன்ற துணை தலைவருமான டி.எஸ்.பி.இராஜகோபால் கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் மரு.அணி.அமை ஜி.சாந்தகுமாரி மா.ஆதி.நல.அ எல்பிஎப்.மோகன் த.பொது.கு.உ டிஆர்.ஏபி.பூர்ணிமா எம்.சி., மா.மீனவ.அமை து.ஆயிரம், மா.அமைப்புசாரா ஓட்டுநர்.அ.அ கு.கிருஷ்ண மூர்த்தி, மா.இ.அ.து.அ ஜெ.பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் அம்பத்தூர் தொகுதி சமூக வளைதள பொறுப்பாளர் திருமதி.சங்கரி தனசேகரன் கலந்து கொண்டு பயிற்சி வழங்கினார்.

இதில் அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் க.முரளிபாபு அ.செல்வம் க.கதீஜா, மா.ரமேஷ், வடக்கு பகுதி வட்ட செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு.வீரா, வெ.இராதாகிருஷ்ணன், மு.இரகு, எம்.கமல் எம்.சி., மற்றும்மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி எம்.சி., எஸ்.உமாசந்தானம் எம்.சி., உஷாநாகராஜ் எம்.சி., ஆகியோரின் முன்னிலையில்,

அம்பத்தூர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் பி.வி.மூர்த்தி, பொன்.நவராஜ்ரவி க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன், எம்.குணசேகரன் மற்றும் அம்பத்தூர் தொகுதி சமூக வளைதள ஒருங்கிணைப்பாளர் அ.செல்வம் மற்றும் சுரேஷ் வடக்கு பகுதி ஒருங்கினைபாளர்கள் கிருஷ்ணகுமார், வைத்தீஸ்வரன், மோனிஷா மற்றும் பாகநிலை முகவர்கள், அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கொண்டார்கள்.

அம்பத்தூர் வடக்கு பகுதி 85வது வட்ட கழக செயலாளர் த.கண்ணபிரான் அவர்கள் நன்றியுரை வழங்கினர்.

ஆலூர் பாலாஜி, கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமை! கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் மாபெரும் மருத்துவ முகாம்!

மதன்குமார் ஒருங்கிணைப்பில் நிகழ்ச்சி! ஷானவாஸ் பாவா பங்கேற்பு!

கத்தார், ஜூலை 1 -

கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பாக நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செம்மொழி நாள் விழா கொண்டாடப்பட்டது.

கத்தாரில் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான செம்மொழி நாளை முன்னிட்டு அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. வழிகாட்டுதலோடு, அமைப்பாளர் மதன்குமார் ஒருங்கிணைப்பில் கத்தார் அயலக தி.மு.க. NRTIA Qatar மற்றும் Naseem மருத்துவ மனை இணைந்து நடத்திய மாபெரும் மருத்துவ முகாம் 27 ஜூன், வெள்ளி அன்று சிறப்பாக நடைபெற்றது.

கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பாக துணை அமைப்பாளர்கள் ஆரூர் பாலாஜி, கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமையிலும், துணை அமைப்பாளர்கள் மேலூர் மதன், கோவை ஜி.எஸ்.ஆர். சத்தியராஜ், ஆற்காடு என். எஸ்.பரந்தாமன், வாளடி ராஜ்குமார், ஹக்கீம் ஆகியோர் முன்னிலையிலும், நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக ICBF அமைப்பின் தலைவர் ஷானவாஸ் பாவா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் நிர்வாகிகள் குளச்சல் முகமது ரபீக், கத்தார் தி.மு.க. அயலக அணி இளைஞரணிச் செயலாளர் மற்றும் நிர்வாகிகளான தஞ்சை ஜி.செந்தில், குரும்பூர் தாஹிர், அ.அசாருதீன், அறந்தை செந்தில்குமார், மு.மெய்யநாதன், கீரமங்கலம் செந்தில் குமார், பாலகுமார் பிரகாஷ், ஏ.மனோஜ், ஆதிகேசவலு, கார்த்தி ஆகியோர் பங்கேற்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் கத்தார் வாழ் தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகளான OTP அமைப்பின் தலைவர் வலியுல்லா, ஜனகரவி இப்ராஹிம் பாக்கர், எம்.கே.பி. அமைப்பின் சார்பில் ரெஜினா சாதிக் உசேன், கத்தார் வாழ் தமிழர்கள் வேலைவாய்ப்பு குழுத் தலைவர் இளங்கோவன் அப்துல் முத்தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கத்தார் வாழ் தமிழர்கள் சுமார் 450 நபர்கள் பதிவு செய்து 250 மேற்பட்டோர் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஆர்கே பேட்டை கிழக்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் வாங்கனூர் ஊராட்சியில் தெருமுனை கூட்டம் ஒன்றிய செயலாளர் பா. சம்பத், ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண்முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல். ஏ கலந்து கொண்டு திராவிட மாடல் ஆட்சி நான்காண்டு சாதனை குறித்து சிறப்புரையாற்றினார் உடன் தலைமை கழக பேச்சாளர் எஸ். கே.ஸ்ரீராம், ஒன்றிய கழகச் செயலாளர்கள் சி. என். சண்முகம்,பெ. பழனி, மா.இரகு, பொதுக்குழு உறுப்பினர் கே. எம். சுப்பிரமணி, ஒன்றிய நிர்வாகிகள் ஏ.கே. திருவேங்கடம், கே. நவீன் குமார், சுகுணா மூர்த்தி, பெருமாள், டில்லி பாபு, சிலம்பு பன்னீர்செல்வம், செங்குட்டவன், சரவணன், சீனிவாசன், ராஜசேகர், மாத்தையா, மு.சதீஷ், ப. நவீன் குமார், பிரவீன் தேஜா,ரமேஷ்,ரஞ்சித் குமார், உள்பட கழக நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் கிளை கழகச் செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - .ஏழுமலை எம்.சி. - கார்த்திகா பாஸ்கர் எம்.சி. பங்கேற்பு!

தியாகராயர்நகர் 132 அ வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

வட்ட கழக செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கை!

சென்னை, ஜூலை 1 -

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராய நகர் மேற்கு பகுதி 132 அ' வட்ட கழக BLA2, மற்றும்.BLC,ஆலோசனை கூட்டம் இன்று நடைபெறுகிது. இது குறித்து வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங் ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென் மேற்கு மாவட்ட தியாகராய நகர் மேற்கு பகுதி 132 'அ' வட்ட கழக BLA2 மற்றும் BLC கூட்டம் இன்று (01/07/2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணி அளவில் என்-12/ 29. சக்கரபாணிதெருவிரிவு மேற்கு மாம்பலம் சென்னை 33-ல் உள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக அருகில் எனது (வட்ட கழக செயலாளர் கே.எஸ்.வெல்டிங் ராஜா) தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மாவட்டகழக செயலாளர் மயிலை.த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி சட்டமன்ற உறுப்பினர், ஜெ.கருணாநிதி. மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாகராயநகர் தொகுதி பார்வையாளர் திருமதி.ரத்னா லோகேஸ்வரன். எம்.சி., திருமதி. பா.கார்த்தகா பாஸ்கர்.எம்.சி. ஆகியோர் முன்னிலையில் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றுவது குறித்த BLA2 மற்றும் BLC ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

ஆகவே இந்த கூட்டத்திற்கு பாக முகவர்கள் மற்றும் மைய வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் வட்டத்திற்குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர்தொண்டர்அணி, சுற்றுச்சூழல்அணி, வழக்கறிஞர் அணி,ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை அணி , பொறியாளர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, தொழிலாளர்அணி பாக முகவர்களின்அணி, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி கிழக்கு மேற்கு பகுதி திமுக சார்பில் BLC பாக நிலை உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் பகுதி கழகச் செயலாளர்கள் பேபிசேகர், பொன்.விஜயன் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு.நாசர் ஆய்வு மேற்கொண்டு பாக நிலை உறுப்பினர்களுக்கு வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் பணிகள் குறித்து சிறப்புரையற்றினார் இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் நிவேதா ஜெசிக்கா பகுதி பார்வையாளர்கள் எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ் குமார்,மாநகரபொறுப்பாளர்சண்.பிரகாஷ், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபிசேகர், வி.அம்மு உள்பட கழக நிர்வாகிகள் பாக நிலை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவரின் ஆணையின் படி, தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் ஓரணியில் தமிழ்நாடு இணையதள உறுப்பினர் சேர்க்கை பயிற்ச்சி முகாம் எல்லாபுரம் ஆத்துப்பாக்கம் , கும்மிடிப்பூண்டி பெத்திகுப்பத்தில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், புதியதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வளைதளமுகவர்கள் (BDA). மற்றும் பாகமுகவர்கள் (BLA2) தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் அனைவரும் இணையதள உறுப்பினர் சேர்க்கை குறித்த காணொளி திரையிடப்பட்டு இணையதள உறுப்பினர் சேர்க்கை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது உடன் சட்ட மன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராஜன், பார்வையாளர் அழகிரி சதாசிவம், மு.பகலவன், எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், கி.வே.ஆனந்த்குமார், ஆ.சத்தியவேலு, மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், நா.பரிமளம், ஜான் பொன்னுசாமி, அபிராமி குமரவேல், இரா. அறிவழகன், உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

மு.ஜெயச்சந்திரன் தலைமையில்

177 வது வட்டக் கழக பாக முகவர்கள் தகவல் தொழில்நுட்ப அணி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் பொ.த.மதிவாணன் அறிக்கை!

சென்னை ஜூலை:1

177வது வட்டக் கழக செயலாளர் பொ.த.மதி வாணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு-

சென்னை தெற்கு மாவட்டம்,வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வட்ட கழக பாக முகவர்கள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி அணி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (1.7.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணி அளவில் அவைத் தலைவர் மு. ஜெயச்சந்திரன் தலைமையில் பகுதி கழக நிர்வாகிகள் சி.பழனி, பொ.த. எழில்வாணன்,வி.ஜி.மோகன் ஆகியோர் முன்னிலையில் வேளச்சேரி மெயின் ரோட்டில் அமைந்துள்ள பொ.தனசேகரன் மாளிகையில் நடைபெற இருக்கிறது.

இந்த அவசர ஆலோசனைக் கூட்டத்திற்கு வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள்(BLA 2), தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் (BDA), மற்றும் வட்டக் கழகத்தை சார்ந்த பல்வேறு அணிகளின் மாவட்ட, பகுதி,வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள்: ஓரணியில் தமிழ் நாடு புதிய கழக உறுப்பினர் சேர்த்தல்.கழக ஆக்கப் பணி.

இவ்வாறு வட்டச் செயலாளர் பொ.த.மதிவாணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்.4 59,வது வார்டு கலைஞர் நெடுஞ்சாலையில் 2024 – 2025 ஆம் ஆண்டின் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10.40 லட்சம் செலவில் கிராம நிர்வாக அலுவலகத்தை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் டி.காமராஜ், தெற்கு பகுதி கழக செயலாளர் மாமன்ற எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி சங்கர், பி.புகழேந்தி, வெங்கடேசன், பகுதி கழகநிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பொது மக்கள் பங்கேற்றனர்.